


சரோஜா அச்சகம், படப்பை 9382853469

தென்னிந்தியத் திருச்சபை – சென்னைப் பேராயம் படப்பை குருசேகரம்

**CSI கிறிஸ்து நாதர் ஆலயம்,** டேவிட் நகர், படப்பை – 601 301.

# விழுதுகள்

## மார்ச் - 2026


(உறுப்பினர் பயன்பாட்டிற்கு மட்டும்)




*“வாருங்கள் ஆண்டவரிடம் நாம் திரும்புவோம்*
*அவரே நம்மை குணமாக்குவார்....*
*அவரே நம் காயங்களை கட்டுவார்.”*

ஓசியா 6: 1

## ஆயர் மடல்



அன்பு திருச்சபை மக்கள் அனைவருக்கும் சிலுவைநாதர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்

**வாருங்கள் ஆண்டவரிடம் நாம் திரும்புவோம்**

**அவரே நம்மை குணமாக்குவார்....**

**அவரே நம் காயங்களைக் கட்டுவார்.** ஒசியா 6:1

பிதாவாகிய நம் கடவுளின் அன்பு மாறாதது. நமது அறிவுக்கு எட்டாதது, அளவிட முடியாதது. உலகில் நாம் கடவுளை விட்டு தூரமாய் போனாலும் அவர் நம்மை நேசித்து நம்மேல் அன்பு கூறுகிற கடவுளாக இருக்கிறார். இந்த லெந்து காலம் நாம் நம்மேல் மாறாத அன்பு செலுத்தும் கடவுளை நோக்கி மனம் திரும்புகிற அருளின் காலம். ஓசியா இறைவாக்கினர் வாருங்கள் ஆண்டவரிடம் திரும்புவோம் என இஸ்ரயேல் மக்களுக்கு அழைப்பு கொடுக்கிறார் கி.மு. 753 முதல் 815 வரை உள்ள காலகட்டத்தில் இஸ்ரயேல் நாடு செல்வ செழிப்பாக காணப்பட்டது ஆனால், ஆன்மீக வாழ்க்கை மிகவும் வறட்சியாக விளங்கியது. மக்கள் கடவுளுக்கு எதிராக செய்த பாவங்களின் விளைவாக பல தண்டனைகளுக்கு உள்ளாகி உடலாலும், மனதாலும் காயப்பட்ட நிலையில் காணப்பட்டனர். தம்மைவிட்டு விலகிப் போன இஸ்ரவேல் மக்களை மீண்டும் தம்மண்டைத் திருப்பும் வண்ணமாக இறைவன் ஓசியா இறைவாக்கினரைத் தெரிந்துக் கொண்டு மனம் திரும்ப அழைப்புக் கொடுத்தார். அவ்வாறு திரும்பும்போது இறைவன் நம் காயங்களை கட்டுவார், வாழ்வை புதுப்பிப்பார் என மக்களுக்கு அறிவுறுத்துகிறார். ஓசியா இந்த உன்னதமான செய்தியை தம்மைவிட்டு விலகி அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கும் இன்றைய உலகிற்கும் நமக்கும் ஆவியானவர் தருகிறார். திருமறையில் அவரது கனிவுள்ள



வார்த்தைகளால் தம் மக்களை தன்னிடம் வரும்படி அழைக்கிறார். "நான் உன்னை எப்படி கைவிடுவேன்? இஸ்ரவேலே நான் உன்னை எப்படி ஒப்புக்கொடுப்பேன்? என் இருதயம் எனக்குள் குழம்புகிறது" (ஓசியா 11.8) என உள்ளம் உருகி தம் அன்புள்ளத்தை வெளிப்படுத்துகிறார் இறைவன். ஆம் அன்பானவர்களே அன்றைக்கு இஸ்ரவேலுக்கு கொடுத்த செய்தி இன்றைய உலகில் வாழும் நமக்கு தேவையான செய்தி. நம்மையே நாம் சிந்தித்துப் பார்ப்போம். நம்மை தாழ்த்தி நம் நிலை உணர்ந்து ஆண்டவரிடம் திரும்புவோம். இதுவே மீட்பின் காலம் என்பதை உணர்ந்து ஆண்டவரிடம் திரும்புவோம். அதே வேளையில் நாம் தேவையிலுள்ள அயலாருக்கு நம்மால் இயன்ற உதவிகளை செய்து கடவுளுக்கு விருப்பமான தவக்காலமாக இதை மாற்றுவோம். நம் அருள்நாதர் இயேசுவைப் பின்பற்றி அவர் அருளும் மகிழ்வின் வாழ்வை சொந்தமாக்கக் கொள்வோம்.

29.03.2026 குருத்தோலை ஞாயிறு பவனியில் சபையார் அனைவரும் காலை 7.00 மணிக்கு தவறாமல் பங்கேற்க அன்புடன் அழைக்கிறோம்.

இந்த மாதம் பிறந்த நாள், திருமண நாள் காணும் ஒவ்வொருவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன். கடவுள் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்.

இறைபணியில்
அருள்பணி **Y. தேவகுமார்,**
**98401 98476**

### தவக்காலம்

தவக்காலம் நம்மை ஒதுக்கும் காலம் அல்ல;
ஒதுக்கப்பட்டவர்களை நினைக்கும் காலம்.
தவக்காலம் உபவாசிக்கும் காலம் மட்டுமல்ல;
உணவில்லாதவர்களை உபசரிக்கும் காலம்.
தவக்காலம் பிறரை திருத்தும் காலம் அல்ல;
தன் குறையை ஆழமாய் உணரும் காலம்.
தவக்காலம் அமைதியாயிருக்கும் காலம் அல்ல;
இறைவனோடு அதிகமாய் உரையாடும் காலம்.
தவக்காலம் முடங்கி கிடக்கும் காலம் அல்ல;
தோய்ந்த இறைப்பணியை முடுக்கி விடும் காலம்.
தவக்காலம் தீயவற்றை விடும் காலம் மட்டுமல்ல;
நற்செயல்களுக்காக திறமைகளை வளர்க்கும் காலம்.
தவக்காலம் மக்களிடமிருந்து பிரியும் காலம் அல்ல;
மக்களோடு ஒப்புரவாகும் காலம்.
தவக்காலம் இயேசுவின் சிலுவையருகே சுற்றும் காலம் அல்ல;
நம் சிலுவையை எடுத்துக் கொண்டு புறப்படும் காலம்.

நல்ல நிலமாகு நண்பா



## பெண்கள் பகுதி

அன்பான திருச்சபை மகளீர் அனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன். நாம் லெந்து காலத்தில் இருக்கிறோம். இக்காலம் வெறும் உபவாச நாட்கள் மட்டுமல்ல அது மனம் திரும்புதலின் காலம் நம்மை ஒடுக்கி ஜெபத்தில் ஆழமாக வளரும் காலம் . திருமறையில் ஜெப வாழவிற்கு நம் ஆண்டவர் இயேசுவே முன்மாதிரியாக இருக்கிறார்.

**1. இயேசு மலைக்கு சென்றார்**

லூக்கா 6:12ல் தம் சீடரைத் தெரிவு செய்யும் முன் மலைக்குப் போய் தனியே இரவு முழுவதும் ஜெபிக்கிறார். அவர் மக்கள் கூட்டத்திலிருந்து விலகி, உலக சத்தங்களுக்கு விலகி, பிதாவோடு தனிமையில் இருந்ததை போன்று நாமும் நம்மை கடவுளோடு இணைந்து கொள்ளவும், நெருங்கி வரவும் லெந்து காலம் நமக்கு அழைப்பைத் தருகிறது லெந்து காலம். நம் மலை அனுபவம் எது சிந்திப்போம்.

**2. இயேசு பிதாவின் சித்தத்திற்காக ஜெபித்தார்**

யோவான் 5.30ல் இயேசு கூறுகிறார் **நான் என் சுயமாய் ஒன்றும் செய்கிறதில்லை**. பிதாவின் சித்தமானதை நான் தேடுகிறபடியால் என் நீதியாய் இருக்கிறது. நாம் தேவசித்தத்தை முதலில் தேட வேண்டும். உணவை தவிர்ப்பது மட்டுமல்ல, நம் அகத்தையே தாழ்த்துவது நம் வாழ்வில் கடவுளின் சித்தமே நடக்க கற்றுக்கொள்வது, காத்திருப்பது அவசியமாக இருக்கிறது. பிதாவின் சித்தம் நிறைவேற நம்மை அவரிடம் அர்ப்பணிப்போம்.



**3. இயேசு தம்மிடம் அழைத்தார்**

இயேசு தெரிவு செய்த சீடர்கள் **அப்போஸ்தலர்கள்** என்று அழைக்கப்பட்டார்கள் அதற்கு **அனுப்பப்பட்டவர்கள்** என்று பொருள். லெந்து காலம் நம்மை சுயநலத்திலிருந்து சேவை செய்ய அழைக்கிறது. பயத்திலிருந்து விசுவாசத்திற்கு அழைக்கிறது. இருளிலிருந்து ஒளிக்கு அழைத்துச் செல்கிறது. நாம் பெண்களாக குடும்ப வாழ்வில் கடினமான சூழலில் சில தீர்மானங்களை எடுக்கிறோம். நமது குடும்பத்திற்காக, பணிக்காக, ஆரோக்கியத்திற்காக, எதிர்காலத்திற்காக எதுவாக இருந்தாலும் நம் ஆண்டவர் இயேசுவைப்போல நாமும் ஜெபத்திலே காத்தருந்து இறைசித்தம் நிறைவேற ஒப்புக்கொடுப்போம், ஜெயமெடுப்போம். ஜெபமில்லா தீர்மானம் பலவீனமாது ஜெபத்துடன் எடுக்கும் தீர்மானம் ஆசீர்வதிக்கப்பட்டது.

படப்பை குருசேகர மகளீர் அனைவருக்கும் மார்ச் – 8ம் நாள் **உலக மகளீர் தின** வாழ்த்துக்களை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி. ஜாய்சிலின் தேவகுமார்
ஆயரம்மா
9884982544

## 2026 – மார்ச் மாத வழிபாட்டு ஒழுங்குகள்

| நாள்/கிழமை | திருமறைப்பாடம் | இறைச்செய்தித் தலைப்பு | நடத்துனர்/செய்தியாளர் |
|---|---|---|---|
| **01-03-2026 ஞாயிறு திருவிருந்து வழிபாடு காலை 8:30** | ரோமர் 12:1-8<br>திருப்பாடல்கள் 51:1-10<br>யோவான் 2:1-12 | **லெந்து காலம் மறுரூபத்தின் காலம் மாற்றுருவாக்க காலம்** | Rev. B.J. பிரேமையா<br>ஆயர் ஓய்வு<br>சென்னைப் பேராயம் |
| **06-03-2026 மூன்றாம் வெள்ளி மாலை 7.00** | **மீட்டுருவாக்கும் ஆண்டவர்**<br>ஏசாயா 44: 1-8 | | Rev. ஜான் டேவிட்<br>CSI ஒரத்தூர் குருசேகரம் |
| **08-03-2026 ஞாயிறு வழிபாடு காலை 8:30** | ஏசாயா 56:1-8<br>திருவெளிப்பாடு 7 : 9-17<br>திருப்பாடல்கள் 86<br>மத்தேயு 15: 21-28 | **அரவணைத்து வாழ அழைப்பு** | திருமதி. கிரேஸ் ப்ரவுனிங் |
| **13-03-2026 நான்காம் வெள்ளி மாலை 7.00** | **எல்லை கடந்து அருட்பொழிவு செய்யும் ஆண்டவர்**<br>ஏசாயா 45: 1-9 | | Rev. செபஸ்டின்<br>CSI நெடுங்குன்றம் குருசேகரம் |
| **15-03-2026 ஞாயிறு திருவிருந்து வழிபாடு காலை 8:30** | ஏசாயா 1:12-17<br>எபேசியர் 6 : 5-9<br>திருப்பாடல்கள் 9<br>லூக்கா 13: 10-17 | **விடுவித்து வாழ அழைப்பு** | ஆயர் |
| **20-03-2026 ஐந்தாம் வெள்ளி மாலை 7.00** | **ஊழியனின் உடனிருக்கும் ஆண்டவர்**<br>ஏசாயா 45: 1-9 | | ஆயர் |
| **22-03-2026 ஞாயிறு வழிபாடு காலை 8:30** | மீகா 7:15-20<br>1 பேதுரு 2 : 17-24<br>திருப்பாடல்கள் 31<br>மாற்கு 10: 46-52 | **சிலுவை : அருளின் வெளிப்பாடு** | திரு. மில்டன் |
| **27-03-2026 ஆறாம் வெள்ளி மாலை 7.00** | **உடைக்கப்பட்டோருக்காக உடைக்கப்படும் ஆண்டவர்**<br>ஏசாயா 52: 13 -53: 12 | | Rev. சுரேஷ் திலக் குமார்<br>CSI மேற்கு தாம்பரம் குருசேகரம் |
| **29-03-2026 ஞாயிறு காலை 7.00** | 2 அரசர்கள் 7:3-21<br>பிலிப்பியர் 4 : 4-13<br>திருப்பாடல்கள் 24<br>மாற்கு 11: 1-13 | குருத்தோலை ஞாயிறு<br>அமைதியின் அரசரை வர விடுங்கள் | திரு. வேலன்டைன் |
| **மாலை 6.00** | பாடுகள் ஞாயிறு ஒருலை விருந்து | | ஆயர் / பாடகற்குழு |



## மார்ச் – 2026 : தங்கள் பிறந்த நாள் காணுவோர்

2 திரு. டைட்டஸ் தாஸ்
திருமதி. பாலின் ஜேசுதாசன்
3 திருமதி. ராஜாலின் தம்பி
5 திருமதி. வெண்ணிலா அன்புராஜ்
6 செல்வி. கேட்லின் லீனா
7 திரு. சிலுவைமணி
திரு. சாமுவேல்
8 செல்வன். அஞ்சான் ஏடன்
9 செல்வன். டேனியல் ஜார்ஜ்
திருமதி. ஜான்சி வின்செண்ட்
திருமதி. அருந்ததி ஜோயல் சிங்
குழந்தை. அட்லின் ஜியானா
10 திரு. டேனியல் பன்னீர்செல்வம்
திருமதி. எஸ்தர் கற்பகம்
திரு. எரிக் லெவின் மத்தியாஸ்
11 திரு. ஜோசபாத்
திரு. ஜெய்சன் ஐசக் பிரின்ஸ்
திரு. ராஜா சாமுவேல்
12 திரு. ஆலன் காபிரியேல் பாபி
செல்வன். ஆர்தர் பிரசன்னராஜ்
செல்வி. ஷர்லின் சான்ட்ரா
13 திரு. சந்திரன்
திருமதி. வசந்தி சுபிதா டேவிட்
செல்வி. ஆன்சி பிரைஸ்
15 திரு. ஜெயராஜ்
திருமதி. மஞ்சு ஆனந்த்
திரு. முத்துராஜா
குழந்தை. ஜோனிஸா பியர்ஸ்
16 செல்வி. அபிஷா ரெனியா
திரு. ஆதித்யா சகா
செல்வன். பிரையன் பால்
ஷிஜீ அன்லின்
17 திரு. டேவிட் ராஜா
செல்வன். சாமுவேல் ஜோஸ்
18 செல்வன். சாம்ராஜ் டேவிட்
திரு. ஸ்டீபன்
19 திரு. ஜாக்ஸன்
திரு. சுரேஷ் குமார்
குழந்தை. ஐடா ஏஞ்சலின்
21 திருமதி. சௌமியா மதன்ராஜ்
திருமதி. ஜென்னி ஜூலியஸ் சாலமோன்
திரு. ஆலிவர் ஜான் ஜோயல்
22 திருமதி. ஜெர்லின் ரெபேக்கா
23 திருமதி. சாரோன் திமோத்தேயு
திரு. ஜெபசிங்
திருமதி. கிரேஸ்லின் டேவிட்
திருமதி. ரெபேக்காள்
திருமதி. ரேச்சலின் பிரெனிதா
திருமதி. பியுலா மெர்சி செல்வின்
திருமதி. ஜென்சி
24 செல்வி. அட்லின் லிண்டா
26 திரு. ஜெய மனோகரன்
27 திருமதி. ரெபேக்காள் பஞ்சாட்சரம்
செல்வி. ரோசானே பெலபெர்ட்டா
28 திரு. பிலிப்பு
திரு. ஸ்பர்ஜன்
திரு. கிளி ஃபோர்டு
செல்வன். ரியான் சுமித்
29 செல்வி. ஜோசின் ஜாய்ஸ்
திருமதி. விமலா ஜேசுதாசன்
30 திரு. ஆனந்தகுமார்
31 செல்வி. பிரீத்திகா
திருமதி. புனிதா செல்லையா
திரு. ராஜேஷ் ஃபிரெட்ரிக்

## மார்ச் – 2026 : தங்கள் திருமண நாள் காணுவோர்

02 திரு. பஞ்சம் – திருமதி. மாலா

04 திரு. ஜெகன் ஜெபராஜ் – திருமதி. ஜான்சி

09 திரு. ராகேஷ் (எ) ஐசக் – திருமதி. ரேவதி

10 திரு. ஆனந்தன் – திருமதி. ரேகா

12 திரு. சந்திரசேகரன் – திருமதி. ஜெயலெட்சுமி

30 திரு. ஆனந்தன் – திருமதி. ஜோதி



## கிளை சபைகள் – மார்ச் – 2026 : தங்கள் பிறந்த நாள் காணுவோர் :

பேரீஞ்சம்பாக்கம் ( பிறந்த நாள் )

| | | |
|---|---|---|
| 01.03.2025 | - | பமிலா |
| 05.03.2025 | - | மஞ்சுளா |
| 23.03.2025 | - | அபிமன்யு |

சென்னகுப்பம் ( பிறந்த நாள் )

| | | |
|---|---|---|
| 08.03.2025 | - | சந்திரா டேவிட் |
| 18.03.2025 | - | கனகா (எ) அன்னாள் |
| 19.03.2025 | - | சரண்ராஜ் |
| 21.03.2025 | - | பிரித்தீஸ்ராஜ் |

பனையூர் ( பிறந்த நாள் )

| | | |
|---|---|---|
| 02.03.2025 | - | திருமதி. தமிழ்செல்வி |
| 10.03.2025 | - | திரு. ரூபன்சாம் கிறிஸ்டோஃபர் |
| 13.03.2025 | - | திரு. காபிரியேல் |
| 30.03.2025 | - | மாஸ்டர் ரபேஃல் |

வடமேல்பாக்கம் ( பிறந்த நாள் )

| | | |
|---|---|---|
| 03.03.2025 | - | திரு. ரஞ்சித்குமார் |
| 21.03.2025 | - | திரு. ஜான் ரகு |
| 23.03.2025 | - | திருமதி. மின்னலா சுகந்தி |
| | | திரு. ஐசயா ஜெபக்குமார் |

சாலமங்கலம் ( பிறந்த நாள் )

| | | |
|---|---|---|
| 03.03.2025 | - | குழந்தை. ஜோஷ்ணி தனசேகர் |
| 06.03.2025 | - | செல்வி. ஏஞ்சல் விசுவாச பாண்டி |
| 07.03.2025 | - | மாஸ்டர். சத்விக் யோவான் |
| | | மாஸ்டர். ரித்விக் யோவான் |



## மார்ச் மாதம் வேத வினா பகுதி

**2 நாளாகமம் 1 – 9**

1. சாலொமோன் கர்த்தரிடம் எதைக் கேட்டான் ?
2. ஆலயம் எந்த மலையில், யார் நிலத்தில் கட்டப்பட்டது ?
3. ஈராம் ஆலயம் கட்ட அனுப்பின நிபுணர் யார் ?
4. உடன்படிக்கைப் பெட்டி எங்கிருந்து கொண்டுவரப்பட்டது ?
5. பன்னிரெண்டு சிங்கங்கள் நின்றது எங்கே ?
6. தேவன் பெரியவர்; அதுபோல எதைப் பெரியதாய்க் கட்ட விரும்பினான் ?
7. தேவாலயம் எப்போது மேகத்தினால் நிறையப்பட்டது ?
8. கந்தவர்க்கங்கள் ஒப்பீரின் தங்கள் ராஜாவும் மிகுதியாய் கொடுத்தது யார் ?
9. ஆலயம் அரமனை கட்டி முடிந்ததும் சாலமோன் எங்கே போனான் ?
10. பூமியின் ராஜாக்கள் எல்லாரும் யார் முகதரிசனத்தைத் தேடினார்கள் ?

## வேத வினா : சரியாகப் பொருத்துக.

(2 நாளாகமம் 1-9)

| | | |
|---|---|---|
| 1. ஆச்சரியத்தால் பிரமை கொண்டது | X | தேசத்துக்கு க்ஷேமத்தை கொடுப்பார் |
| 2. ஆலயத்தின் உட்புறம் | X | ஆலயம் அரமனை கட்ட |
| 3. வலதுபுறத் தூண் | X | ஞானதிருஷ்டிக்காரன் |
| 4. வலைபின்னல் நானூறு | X | மோசே வைத்த இரு கற்பலகைகள் |
| 5. லீலிபுஷ்பம் போல் | X | பான பாத்திரம் |
| 6. இருபது வருஷம் | X | யாகீன் |
| 7. இத்தோ | X | சேபாவின் ராஜஸ்திரி |
| 8. பரிசுத்தவான்கள் | X | மாதளம் பழங்கள் |
| 9. உடன்படிக்கைப் பெட்டியில் | X | பசும்பொன் தகட்டால் மூடினான் |
| 10. தங்களைத் தாழ்த்தி ஜெபித்தால் | X | நன்மையிலே மகிழ்வார்கள் |

திருமதி ராய் டேவிட்

**விடைகளை மார்ச் 25-ம் தேதிக்குள் அனுப்பவும்.**

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி :

**CSI** ***கிறிஸ்து நாதர் ஆலயம்***

6/371, ஞானம்மாள் ரோடு, டேவிட் நகர், படப்பை – 601 301.

## பிப்ரவரி மாத – வேத வினாப் போட்டி – சரியான விடைகள் :

| | | |
|---|---|---|
| 1. | 1 நாளாகமம்.... 16 : 6 | பெனாயா, யாகாசியேல் |
| 2. | 1 நாளாகமம்.... 21 : 15 | எபூசியனாகிய ஒர்னானின் களத்தன்டை |
| 3. | 1 நாளாகமம்.... 22 : 7 | நாமத்திற்கு – ஆலயத்தை – இருதயத்தில் |
| 4. | 1 நாளாகமம்.... 17 : 17 | மேன்மையான மனுஷனாக |
| 5. | 1 நாளாகமம்.... 20 : 5 | லாமியின் ஈட்டி |
| 6. | 1 நாளாகமம்.... 27 : 32 | புத்தியும் படிப்புள்ள யோனத்தான் |
| 7. | 1 நாளாகமம்.... 28 : 4 | தாவீது |
| 8. | 1 நாளாகமம்.... 21 : 17 | தாவீது |
| 9. | 1 நாளாகமம்.... 28 : 9 | தாவீது சாலொமோனிடம் |
| 10. | 1 நாளாகமம்.... 23 : 5 | நாலாயிரம் பேர் |

**பெண்களுக்கான வேதவினாப் போட்டி**

**பிப்ரவரி மாத சரியான விடைகள் அனுப்பியவர்களை வாழ்த்துகிறோம்.**

செல்வி. ஹாரியம் அற்புதா
திருமதி. ஏஞ்சல்ஸ் மேஷாக்
திருமதி. ஏஞ்சலின் ரூஃபஸ்
திருமதி. தனபாக்கியம்
திருமதி. அபிகாயில் மனோரஞ்சிதம்
திருமதி. பானுமதி
திருமதி. ஸ்வீனா பிரவீன்
திருமதி. கமலா இம்மானுவேல்
திருமதி. எமிலி லில்லி ஜாய்ஸ்
திருமதி. செல்வகுமாரி
திருமதி. வசந்தி டேவிட்
திருமதி. குளோரி ஸ்டீபன்பால்
திருமதி. கமலா ஜெரேமியா
திருமதி. பெரில் பாஸ்கர்
திருமதி. அமுதா அப்பாதுரை
திருமதி. ஜெமிமா ஹாப்டே
திருமதி. எமிமாள் வேதநாயகம்
திருமதி. ரோஸ்லின் வத்சலா
திருமதி. ஜான்சி
திருமதி. மல்லிகா ஸ்டான்லி
திருமதி. ஷாலினி சாம்
திருமதி. எஸ்தர் சாம் சுந்தர்
திருமதி. பிரேமா கிறிஸ்டோஃபர்
திருமதி. ஸ்டெல்லா மேஷாக்
திருமதி. ஞானதீபம் கிறிஸ்டி
திருமதி. செல்வரூபி ஆண்ட்ரூஸ்
திருமதி. கீதா கௌதமி
திருமதி. புதுமை அந்தோணியம்மாள்
திருமதி. மஞ்சு ஆனந்தகுமார்
திருமதி. ஏஞ்சல் தேவகுமாரி
திருமதி. ஜாய் கென்னடி
திருமதி. ரத்னா
திருமதி. கிருபாவதி
திருமதி. டாரதி ஸ்டீஃபன்
திருமதி. ஷைலா ரெபேக்கா
திருமதி. ஜெயராணி விக்டர்
திருமதி. ஜீவகனி
திருமதி. ஜாஸ்வின் சுபிட்
திருமதி. மேரி கிருபாள்
திருமதி. புனிதவதி
திருமதி. ஆலிவ் எபன்
திருமதி. ஸ்டெபினா ஸ்டீபன்
திருமதி. ஜாய்ஸ் ராஜாசாமுவேல்



**ஆண்களுக்கான குறுக்கெழுத்துப் போட்டி**

*பிப்ரவரி மாத சரியான விடைகள் அனுப்பியவர்களை வாழ்த்துகிறோம்.*

திரு. செல்வின் ஜெயகரன்
திரு. ஆண்ட்ரூஸ்
திரு. பால்ராஜ்
திரு. சாலமோன் சந்திரபாபு
திரு. டியூக் இம்மானுவேல்
திரு. அனிஷ்குமார்
திரு. பஞ்சம்
திரு. பிரான்சிஸ்
திரு. சாமுவேல்
திரு. ஆனந்தகுமார்
திரு. அகஸ்டின் ஜெயபால்
திரு. தர்மராஜ்
செல்வன். செல்வ பிரேம்
திரு. மேஷாக்
திரு. கிருபை நாயகம்
திரு. சாலமன் வில்லியம் ஹாஃப்டே
திரு. வின்செண்ட் ஜெயராஜ்
செல்வன். நிவின் கார்வின்
திரு. ஸ்டான்லி ராஜ்குமார்
திரு. டேவிட் ராஜ்குமார்
திரு. ஆன்டனி ஜேக்கப்ராஜா

**திருச்சபையார் கவனத்திற்கு :**

**சுயவெறுப்பு உண்டியல்**


தவக்காலத்தில் ஆலயத்திலிருந்து கொடுக்கப்படும் லெந்து கால சுய வெறுப்பு குடும்ப உண்டியல்களை பெறாதவர்கள் தவறாமல் பெற்றுச் சென்று, **05.04.2026 பெரிய வெள்ளிக்கிழமை** ஆராதனையில் ஆலயத்தில் கொண்டு வந்து படைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அன்பான திருச்சபை குடும்பத்தாரே சபை உறுப்பினர் படிவம் புதுப்பிக்கும் பணியில் இதுவரைக்கும் அங்கத்தினர் படிவங்களை பெற்றுக் கொண்டவர்கள் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம் பெற்றுக் கொள்ளாதவர்கள் சபையில் பெற்றுக் கொண்டு இந்த மாத இறுதிக்குள் சமர்ப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஆயர்

## ஆண்களுக்கான குறுக்கெழுத்துப்போட்டி
## மார்ச் மாதம் – 2026

1 தெசலோனிக்கேயர் 1 – 5




**இடமிருந்து வலம் :**

1. பவுலும் தீமோத்தேயுவும் யாருடன் சேர்ந்து தெசலோனிக்கேயர் திருச்சபைக்கு இந்நிருபத்தை எழுதுகிறார்கள் ?
2. தெசலோனிக்கேயர் பரிசுத்த ஆவின் சந்தோஷத்தோடு எதை ஏற்றுக்கொண்டார்கள் ?
4. இயேசு கிறிஸ்து எங்கிருந்து வருவதை இவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் ?
5. மனுஷரால் வரும் ....................தேடவில்லை.
6. எந்த பட்டணத்தில் தனித்து விடப்படுகிறது நன்மை என்று நினைத்தார்கள் ?
7. ஒருவரை ஒருவர் தேற்றி ஒருவருக்கொருவர் ............ உண்டாகும்படி செய்யுங்கள் ?
9. நாம் எவைகளின் மேல் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவோம் ?
10. எல்லாவற்றையும் சோதித்து பார்த்து .................பிடித்துக்கொள்ளுங்கள்.


**மேலிருந்து கீழ் :**

3. இவர்கள் எதைவிட்டு தேவனிடத்தில் மனந்திரும்பினார்கள் என்று பவுல் சொல்கிறார் ?
4. கர்த்தர் தேவ எக்காளத்தோடு எங்கிருந்து இரங்கி வருவார் ?

**விடைகளை மார்ச் 25-ம் தேதிக்குள் அனுப்பவும்.**



## பிப்ரவரி மாதம் ஆண்களுக்கான
## குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகள்




“நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்’ என்றார்.” மத்தேயு 21:22

# மார்ச் மாத உபவாசக் கூடுகை – 2026

**14.03.2026 சனிக்கிழமை**

காலை 10:00 மணிமுதல் 1:00 மணி வரை

இடம்: **CSI கிறிஸ்து நாதர் ஆலயம்**



<u>தலைமை :</u>

**Rev. Y.** ***தேவகுமார்***

ஆயர்



<u>இறைச் செய்தி :</u>

***திருமதி. டெல்சி டிக்கன்*** அவர்கள்

சிறப்புப் பாடல்கள், துதி ஆராதனை, சாட்சிகள், தேவ செய்தி, ஜெபவேளை

அனைவரும் ஒருமித்து ஜெபிக்க இது ஒரு நல்ல வாய்ப்பு!

***அனைவரும் பங்கேற்போம் !***

***(மதிய உணவு வழங்கப்படும்.)***

40 நாள்

40 தியானம்

## இயேசு "என்னைப் பின்பற்றட்டும்" மத்தேயு 16:24

## தவக்கால சிந்தனைகள்

### தினமும் காலை 6.00 - 6.30 திருவிருந்து

அன்பான திருச்சபைக்கு!

கிறிஸ்துவில் புது வாழ்வு பெற நம்மை அழைக்கும் காலம் லெந்து காலம். தபசு காலங்களில் நாற்பது நாட்கள் உபவாசம், செபம், ஒறுத்தல், தியானம், ஈகை என்று பலவற்றை நம் வாழ்வில் பின்பற்றுகிறோம். இவ்வாண்டும் நம் ஆலயத்தில் 40 நாட்கள் தவக்கால தியானம் காலை 6.00 மணி முதல் 6.30 மணி வரை தினமும் திருவிருந்து வழிபாடுடன் நடைபெறும். **இயேசு – "என்னை பின்பற்றட்டும்"** எனும் தலைப்பில் அருள்நாதர் **இயேசுவின் தெய்வீகக் குணங்களின்** மகத்துவங்களை நாம் ஒன்றிணைந்து சிந்திப்போம். அனைவரும் தவறாமல் பங்கேற்று இறை ஆசி பெற அன்புடன் அழைக்கிறேன்.

**நாற்பது நாட்கள் கடவுளின் கற்பனைப்படி செயல்பட்டால்**
**அந்த ஆன்மா புதிய வாழ்வைக் கண்டு கொள்கிறது.**

கிரேக்க பழமொழி

| நாள் / கிழமை | பொருள் | திருமறைப்பகுதி |
|---|---|---|
| 02.03.2026 திங்கட்கிழமை | இயேசுவின் அர்ப்பணிப்பு | லூக்கா 2:22,40 |
| 03.03.2026 செவ்வாய்க்கிழமை | இயேசுவின் பொறுமை | ரோமர் 5:34, 2 தெச.3:15 |
| 04.03.2026 புதன்கிழமை | இயேசுவின் பணிவு | மாற்கு 10:43-45 |
| 05.03.2026 வியாழக்கிழமை | இயேசுவின் சித்தம் | யோவான் 5:30, 6:38 |
| 06.03.2026 வெள்ளிக்கிழமை | இயேசுவின் மன உறுதி | யாக். 1:2-4,12 |
| 07.03.2026 சனிக்கிழமை | இயேசுவின் திருப்பணியில் பெண்கள் | லூக்கா 8:1-3 |
| 09.03.2026 திங்கட்கிழமை | இயேசுவின் சகிப்புத்தன்மை | எபிரேயர் 12:2 |
| 10.03.2026 செவ்வாய்கிழமை | இயேசுவின் நீதி | பிலிப்பியர் 1:10 |
| 11.03.2026 புதன்கிழமை | இயேசுவின் பக்தி வைராக்கியம் | யோவான் 2:17 |
| 12.03.2026 வியாழக்கிழமை | இயேவின் சமாதானம் | யோவான் 14:27 |



| நாள் / கிழமை | பொருள் | திருமறைப்பகுதி |
|---|---|---|
| 13.03.2026 வெள்ளிகிழமை | இயேசுவின் பரிசுத்தம் | லூக்கா 5:8 |
| 14.03.2026 சனிக்கிழமை | இயேசுவின் கேள்விகள் | மத்தேயு 5:46, 6:27 |
| 16.03.2026 திங்கட்கிழமை | இயேசுவின் கனிவு | மத்தேயு 11:29 |
| 17.03.2026 செவ்வாய்கிழமை | இயேசுவின் கண்கள் | யோவான் 5:6 |
| 18.03.2026 புதன்கிழமை | இயேசுவின் சொற்கள் | மாற்கு 12:37 |
| 19.03.2026 வியாழக்கிழமை | இயேசுவின் அன்பு | ரோமர் 5:8 |
| 20.03.2026 வெள்ளிக்கிழமை | இயேசுவின் மன்னிப்பு | மாற்கு 2:10 |
| 21.03.2026 சனிக்கிழமை | இயேசுவின் நுகம் | மத்தேயு 11:30 |
| 23.03.2026 திங்கட்கிழமை | இயேசுவின் ஆறுதல் | யோவான் 14:1 |
| 24.03.2026 செவ்வாய்கிழமை | இயேசுவின் கரிசனை | லூக்கா 18:38-43 |
| 25.03.2026 புதன்கிழமை | இயேசுவின் போதனை | யோவான் 3:1-13 |
| 26.03.2026 வியாழக்கிழமை | இயேசுவின் இலக்கு | லூக்கா 4:116-18 |
| 27.03.2026 வெள்ளிக்கிழமை | இயேசுவின் நன்றியுணர்வு | யோவான் 6:11 |
| 28.03.2026 சனிக்கிழமை | இயேசுவின் உரையாடல் | லூக்கா 11:38-42 |
| 30.03.2026 திங்கட்கிழமை | இயேசுவின் பரிந்துரை | 1 யோவான் 2:1 |
| 31.03.2026 செவ்வாய்கிழமை | இயேசுவின் திருவுடல் | யோவான் 6:55-56 |
| 01.04.2026 புதன்கிழமை | இயேசுவே வழி | யோவான் 14:6 |
| 02.04.2026 வியாழக்கிழமை | இயேசுவே சத்தியம் | யோவான் 14:6 |
| 03.04.2026 வெள்ளிக்கிழமை | இயேசுவே ஜீவன் | யோவான் 14:6 |
| 04.04.2026 சனிக்கிழமை | இயேசு நிலைவாழ்வின் நம்பிக்கை | யோவான் 11:24-26 |

*பாடகர் குழுவினரின் பாடுகள் ஞாயிறு*

*சிறப்பு பாடல் வழிபாடு*

**நாள் : 29.03.2026 ஞாயிறு நேரம் : மாலை 6.00**
**(Passion Sunday)**

அன்பானவர்களே !

குருத்தோலை ஞாயிறு அன்று மாலை பாடுகள் ஞாயிறாக நமது திருச்சபையில் அனுசரிக்கப்படுகிறது. இவ்வழிபாட்டில் நமது ஆலயத்தின் பாடகர் குழுவினர் ஆண்டவர் இயேசுவின் பாடுகள், மரணம் குறித்து சிறப்பு பாடல் வழிபாடு நடத்துகிறார்கள். இந்த ஆண்டு 29.03.2026 அன்று மாலை 6.00 மணிக்கு இச்சிறப்பு பாடல் வழிபாடு நமது ஆலயத்தில் நடைபெறும் . சபையார் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு இறைஆசி பெறுவோம்.

## ஒருலை விருந்து

ஆதித் திருச்சபையும், நம் அருள்நாதர் இயேசுவும் அனுசரித்த திருவிருந்தை நினைவு கூறும் வண்ணம் கடந்த ஆண்டைப் போல் நம் இல்லங்களில் கோதுமை சப்பாத்தி சமைத்து ( நமது குடும்ப எண்ணிக்கைக்கு ஏற்றவாறு ) ஆலயத்தில் படைத்து பொதுவில் இணைந்து பகிர்ந்து உண்ணும் **ஒருலை விருந்தில்** குருசேகர குடும்பமாக பங்கேற்று இறை ஆசீர் பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆயர்

## குருத்தோலை சாட்சி பவனி



**29.03.2026 ஞாயிறு காலை குருத்தோலை சாட்சி பவனி நமது ஆலயத்திலிருந்து காலை 7.00 மணிக்கு புறப்படும். திருச்சபையார் அனைவரும் தவறாமல் பங்கேற்க அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**

**அன்புடையீர் வருகின்ற புனித வெள்ளி வழிபாட்டில் பன், மோர், வழங்குகிறவர்களும் மதியம் உணவு வழங்க விரும்புகிறவர்களும் ஆயரை தொடர்புக் கொள்ளவும்.**

05/04/2026 உயிர்த்தெழுதல் பண்டிகை முன்னிட்டு நமது சபைக்கும், கிராம சபைக்கும் கேக், டீ தர விரும்புகிறவர்கள் ஆயரை தொடர்புகொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.



## *மூத்தோர் பகுதி*


கர்த்தரின் பெரிதான நாமத்தினாலே, மூத்தோர் ஒவ்வொருவருக்கும் என் அன்பான வாழ்த்துகளையும் ஸ்தோத்திரத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். நமது வேதாகமத்தில் இயேசு கிறிஸ்து, மோசே மற்றும் எலியா ஆகிய மூவரும் 40 நாட்கள் உபவாசம் இருந்தார்கள். அவர்கள் தேவனுடைய வேலையைத் தொடங்குவதற்கு முன்போ அல்லது தேவனோடு நெருங்கி தரித்திருக்கும் காலத்திலோ இந்த அதீத உபவாசத்தை மேற்கொண்டனர். இயேசு கிறிஸ்து ஞானஸ்நானத்திற்குப் பிறகு வனாந்தரத்தில் பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு முன் 40 நாட்கள் இரவும் பகலும் உபவாசம் இருந்தார். அதற்குப் பின்னர் தமது ஊழியத்தைத் தொடங்கினார்.மோசே, சீனாய் மலையில் பத்து கட்டளைகளைப் பெற்றுக்கொள்வதற்காக 40 நாட்கள் இரவும் பகலும் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் உபவாசம் இருந்தார். தேவனுடைய சந்நிதியில் தங்கி, அவருடைய சித்தத்தை அறிய உபவாசம் உதவுகிறது. எலியா, யேசபேலுக்கு பயந்து ஓடியபோது, தேவதூதன் கொடுத்த உணவு ( அடை மற்றும் தண்ணீர்) மூலம் கிடைத்த பலத்தினால் 40 நாட்கள் எதுவும் புசியாமல் பயணம் செய்து தேவ பர்வதமாகிய ஓரேப் மலைக்கு சென்றார் (1 இராஜாக்கள் 19:8). அங்கு தேவன் பலத்த காற்றிலும் அல்ல, பூமி அதிர்ச்சியிலும் அல்ல, மெல்லிய சத்தத்தில் அவரோடு பேசினார் (1 இராஜாக்கள் 19:12). எலியா திரும்பி வந்து எலிசாவை அபிஷேகம் செய்தார். பின்னர் யோர்தான் நதியை கடந்தார். இறுதியில் அவர் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்.சோர்வான நேரங்களில் உபவாசமும் ஜெபமும் ஆவிக்குரிய பலத்தை அளிக்கின்றன.60 வயதிற்கு மேல் தடுமாற்றமின்றி நடப்பதற்கு என்ன செய்ய வேண்டும்? வலிமையாக இருப்பதற்கு கால்களைப் பராமரிப்பது மிகவும் முக்கியம். வயதானபோது உடலில் தசை பலவீனம், மூட்டு நெகிழ்வுத்தன்மை குறைதல் மற்றும் எலும்பு அடர்த்தி குறைதல் போன்ற இயற்கை மாற்றங்கள் ஏற்படுகின்றன.பார்வை குறைபாடுகளும், சமநிலையை நிர்வகிக்கும் உள் காது அமைப்பு (Vestibular System) குறைபாடுகளும் சமநிலையின்மைக்கு காரணமாக இருக்கலாம். மேலும் நீரிழிவு நோயும், நாம் எடுத்துக்கொள்ளும் சில மருந்துகளும் சமநிலையை பாதிக்கக்கூடும்.இந்த சமநிலையைப் பராமரிக்க உடற்பயிற்சி அவசியம். அது உடலின் நெகிழ்வுத்தன்மையை அதிகரிக்க உதவும்.இரண்டாவதாக, நடைபயிற்சி தசைகளை வலுப்படுத்துகிறது. அது எலும்பு உறுதியையும் இதய ஆரோக்கியத்தையும் பாதுகாக்க உதவுகிறது. உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் முக்கியமானது தண்ணீர். போதுமான அளவு தண்ணீர் குடிக்காவிட்டால் தசைகள் பலவீனமடையும்; சிந்திக்கும் திறனும் குறையும். 60 வயதிற்கு மேல் தாகம் ஏற்படும் உணர்வு குறையக்கூடும். எனவே தினமும் குறைந்தது 8 கிளாஸ் தண்ணீர் குடிப்பது நல்லது.சரியான காலணிகளை அணிவதும் முக்கியம். அதேபோல் போதுமான தூக்கமும் அவசியம். நன்றாகத் தூங்குவதால் தசைகள் வலுப்பெறும்; மூளையும் சுறுசுறுப்பாக செயல்படும். நாம் நம் ஆரோக்கியத்தை கவனித்துக்கொண்டால், அதுவே நம் பிள்ளைகளுக்குச் செய்யும் பெரிய உதவியாக இருக்கும். நாம் கர்த்தருடைய கரங்களில் பாதுகாப்பாக இருக்கிறோம். நாம் கலங்கவும் பயப்படவும் தேவையில்லை. கர்த்தர் தாமே நமக்கு ஆற்றலையும் வலிமையையும் கொடுத்து, நம்மையும் நம் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக.

திரு. நவராஜ் ரவீந்திரன்
கன்வீனர்

## பிப்ரவரி மாத வண்ணம் தீட்டுதல் போட்டியில் பங்கேற்ற பிள்ளைகள்


| | | |
|---|---|---|
| ஜெயனா | - | 3ஆம் வகுப்பு |
| அதிரையன் | - | 3ஆம் வகுப்பு |
| அதிரியா | - | 3ஆம் வகுப்பு |
| எலைஜா மிராக்லன் | - | 2ஆம் வகுப்பு |
| ஈனோக் மேத்யூஸ் | - | 2ஆம் வகுப்பு |
| பெத்தானி | - | Pre K.G |
| ஹிவின்த் | - | 1ஆம் வகுப்பு |
| இவான்தி | - | 4ஆம் வகுப்பு |
| டானிகாலீக் | - | Pre K.G |
| ஷெரி பிரைஸி | - | 5ஆம் வகுப்பு |
| பிளஸ்வின் | - | 5ஆம் வகுப்பு |
| ஜோஸ்லின் | - | 4ஆம் வகுப்பு |
| ஜெனிட்டா மெர்ஸி | - | 5ஆம் வகுப்பு |
| பெனியேல் மார்க்கஸ் | - | 1ஆம் வகுப்பு |
| மர்லியா பிளெஸ்ஸி | - | 3ஆம் வகுப்பு |
| சைன் ஐசக் மதன்ராஜ் | - | 2 1/2 வயது |
| ஆதவன் | - | 1ஆம் வகுப்பு |
| ஷெர்லின் சான்ட்ரா | - | 3ஆம் வகுப்பு |
| ஈத்தன் ஜெரேமியா | - | 4ஆம் வகுப்பு |
| ஜான் ஜெப்ரி ராஜா | - | Play School |
| ஃபீபி ஜோவன்னா | - | Pre K.G |
| ஜெர்ஷோன் | - | 2ஆம் வகுப்பு |
| ஜெரிக் நத்தானியேல் | - | L.K.G |
| அபிஷா | - | 6ஆம் வகுப்பு |
| ஜோவிட்டா | - | Pre K.G |
| ஆதன் ரத்தன் அம்புரோஸ் | - | 1ஆம் வகுப்பு |
| அமண்டா அம்புரோஸ் | - | 4ஆம் வகுப்பு |
| காலேப் ஆரோன் | - | 6ஆம் வகுப்பு |
| சஜின் மேத்யூ | - | 1ஆம் வகுப்பு |
| ராபின்சன் | - | 4ஆம் வகுப்பு |
| சத்வின் | - | U.K.G |
| ரித்விக் | - | U.K.G |
| யாத்விக் | - | Pre K.G |
| தவிஸ் டாவின் | - | 4ஆம் வகுப்பு |
| அன்புராஜன் | - | 4ஆம் வகுப்பு |
| ஐடா ஏஞ்சலின் | - | 1ஆம் வகுப்பு |
| மைக்கேல் ராஜா ஐசக் | - | 4 1/2 வயது |
| ரியானா அகெஸ்டி | - | 2ஆம் வகுப்பு |
| மிஸ்ட்டி மார்ட்டினா | - | 5ஆம் வகுப்பு |
| ஆக்னஸ் ஸ்டார் மீகா | - | 4ஆம் வகுப்பு |





## சிறுவர் பகுதி <u>வண்ணம் தீட்டுதல்</u>

(10 வயதுக்கு உட்பட்ட சிறு பிள்ளைகள் மட்டும்)



பெயர் :

வகுப்பு :

கையொப்பம் :

**வண்ணம் தீட்டிய படத்தை மார்ச் 25-ம் தேதிக்குள் ஆலயத்தில் சேர்க்கவும்.**

வண்ணம் தீட்டி அனுப்புகிறவர்கள் தங்கள் பெயரைத் தமிழில் தெளிவாக எழுதவும்.